<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO.43/2009

Deposition of Witness DW-1

| | |
|---|---|
| Name | : கமலகண்ணன். |
| Father's Name /W/o | : பத்பநாபன் |
| Religion | : இந்து |
| Caste | : S C |
| Calling | : ரயில்வே துறை |
| Address | : மேல்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 23.10.2018

<u>குறுக்கு விசாரணை -</u>

வாதி தாவாவை அவருடைய சொத்து சரியாக பிரிக்கப்படாததால் மீண்டும் பரிக்கப்படவேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ளார். பிராதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேன். வாதியுடன் உடன் பிறந்தவர் மூவர் என்றால் சரிதான். வாதியின் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகளா என்று எனக்கு தெரியாது. குப்பய்யா தேவரின் மனைவி சரசம்மாள் பாகப்பிரிவினை கோரி சோளிங்கர் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு போட்டாரா என்று எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் பாகப்பிரிவினை தீர்ப்பு அவருக்கு சாதகமாக வந்து ஏற்கனவே குடும்பத்தாருக்குள் பிரித்து கொண்ட வாதியின் பாகம் தீர்ப்பின் படி சரசம்மாளுக்கு சென்று விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எத்தனை இன சொத்துக்களுக்கு வழக்கு போட்டிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண். 136/1, மற்றும் 136/2பி என்ற சர்வே எண்ணில் உள்ள சொத்தை ஜீவரத்தினம்மாள் அவருக்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்தை எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார். சரசம்மாள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை தாவா நிலுவையில் உள்ள போது தான் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிகொள்ளப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஏற்கனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அ.வ.எண். 103/95 வழக்கில் 02.05.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம்

செல்லாது என்று தீர்ப்பில் சொல்லப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரசம்மாள் போட்ட வழக்கில் வாதி மற்றொரு இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அந்த வழக்கிலும் முனியம்மாள் எழுதி வைத்த உயில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதி சொத்துகள் இன்றளவும் பிரிக்கப்படாமல் உள்ளது என்றும் கூட்டு அனுபவத்தை தடை செய்யக்கூடாது என்று தான் வழக்கு போட்டுள்ளார் என்றால் ஏற்கனவே சொத்து பிரிக்கப்பட்டு வாதி அவருடைய பாகத்தை விற்று விட்டார். என்னுடைய பதிலுரையில் 2வது பிரதிவாதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் சரவணன் என்பவருக்கு முகவர் என்ற முறையில் கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மைதான். சொத்தை சரவணன் எனபவர் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சரவணனை வழக்கில் தரப்பினராக சேர்க்க மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்குகள் நிலுவையில் இருக்கும் பொழுது 2வது பிரதிவாதி எனக்கு பொது அதிகாரம் கொடுத்து அதன் அடிப்படையில் நான் சரவணனுக்கு கிரையம் கொடுத்துள்ளதால் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியம் வாதிக்கு இல்லை என்றால் தவறு. வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரிந்து கொண்டு நான் பொய்யான வழக்காடி உள்ளதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.